**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.165** **நாள் : 26.05.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், மணலி மண்டலத்திற்குட்பட்ட கடப்பாக்கம் ஏரியில் ரூ.58.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளை இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், மணலி மண்டலம், வார்டு-16க்குட்பட்ட கடப்பாக்கம் ஏரியில் ரூ.58.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளை இன்று (26.05.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கடப்பாக்கம் ஏரியில் மேம்பாட்டுப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதைப் பார்வையிட்ட மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் நடைபெற்று வரும் இதரப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

மணலி மண்டலத்திற்குட்பட்ட கடப்பாக்கம் ஏரியில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF) நிதியில் ரூ.58.31 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் குளம் 134.89 ஏக்கர் பரப்பளவில் 13.4 சதுர கிலோ மீட்டர் நீர்ப்பிடிப்பு பகுதியுடன் 4 முதல் 8 மீ. ஆழத்துடன் 1.2 மில்லியன் கனமீட்டர் நீர் கொள்ளளவு திறனுடன் இருந்தது. தற்போது இது 1.19 மில்லியன் கனமீட்டர் நீர் கொள்ளளவு திறனுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் குளத்தில் ஆகாயத்தாமரை அகற்றுதல், 7.2 இலட்சம் கனமீட்டர் பரப்பளவில் வண்டல் மண் அகற்றி தூர்வாருதல், 3,450 மீட்டர் நீளத்திற்கு கரைகள் அமைத்து பலப்படுத்துதல், நீர் உள்ளே வரும் கால்வாய்கள், வெளியேறும் மதகுகள் மற்றும் உபரிவடிகால்களைப் புதுப்பித்தல், 5 ஏக்கர் பரப்பளவில் பறவை தீவு மற்றும் பல்லுயிர் வாழ்விடங்களை உருவாக்குதல். வண்டல் மண்ணைக் குறைப்பதற்கும் நீரின் தரத்தை மேம்படுத்துவதற்கும் நுழைவாயிலில் ஆழமற்ற குளம் உருவாக்குதல், பசுமைத் தோட்டங்களுடன் கூடிய பகுதிகள், பசுமைப் பரப்பளவை அதிகரிக்கும் வகையில் 21,219 செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நடுதல், நடைபாதை, இருக்கைகள் மற்றும் குழந்தைகள் விளையாடும் பகுதி, பட்டாம்பூச்சி மற்றும் தட்டாம்பூச்சி பன்முகத்தன்மைக்கு பிரத்யேக இடம், 3 மதகுகள், 2 நுழைவு வாயில்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**